# இறைவார்த்தையின் வல்லமை!

*டாக்டர் திருமதி லில்லியன் ஸ்டான்லி*

**செ**ய்திக்குள் போகுமுன் நாம் ஏன் சோதிக்கப்படுகிறோம் என்று சற்று ஆராய்வோம். பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே இயேசு வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார் (மத் 4:1). ''எங்களை சோதனைக்குட்படப்பண்ணாதேயும்" என்று ஜெபிக்க இயேசு நமக்குக் கற்பித்தார். ஆனால் இங்கே ஆவியானவர் இயேசுவை பிசாசினாலே சோதிக்கப்படுவதற்குக் கொண்டு செல்கிறார். நாம் ஜெபிக்க வேண்டும்தான். ஆனால் இரண்டு காரணங்களுக்காக நாம் சோதிக்கப்படும்படி தேவன் அனுமதிக்கிறார் —

1. நம்முடைய இருதயத்திலுள்ளதை அறியும்படிக்கு

2. அவருடைய கட்டளைகளை நாம் கைக்கொள்வோமா மாட்டோமோ என்று அறியும்படிக்கு (உபா 8:2).

ஆபிரகாம் பரீட்சையில் தேறினபோது, ஆண்டவர், "நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று **இப்பொழுது** அறிந்திருக்கிறேன்" என்றார் (ஆதி 22:12). ஒவ்வொரு சோதனையும் நம்மை வனைந்து உரமேற்றும்.

இப்பொழுது இறைவார்த்தையின் வல்லமையைக் குறித்துப் பார்க்கலாம். மத்தேயு 4:1 "அப்பொழுது" என்று துவங்குகிறது. அப்பொழுது இயேசு ஆவியானவராலே கொண்டுபோகப்பட்டார். அப்பொழுது என்றால் "எப்பொழுது?" பதில் காண முந்தின வசனத்திற்குச் செல்வோம் — இறைவன், "இவர் என்னுடைய குமாரன்'' என்று சொன்னபோது. மாற்கு 1:11இல் இயேசுவிடம் ஆண்டவர் நேரடியாக, "நீர் என்னுடைய நேசகுமாரன்" என்றது தெள்ளத் தெளிவாக உள்ளது. இயேசுவிடம் பிதா அவர் தன்னுடைய மகன்தான் என்று உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? இயேசுவுக்கு அது தெரியாதா?

இயேசு இப்பொழுது 100% தெய்வம், 100% மனிதன். மனிதர் அலைகழிக்கப்படும் எல்லா சந்தேகங்கள், குழப்பங்கள் அவரையும் ஆட்டிப்படைத்தன. இதை பிசாசு சாதகமாக்கிக் கொண்டான். இயேசுவின் குமாரத்துவத்தை கடவுள் உறுதிப்படுத்தின உடனே பிசாசு தந்திரமாக சவால் விடுகிறான், "நீர் யாரென்று இறைவார்த்தை உரைத்தது உண்மைதானா? அப்படியானால் அதை நிரூபியும்" (மத் 4:1), அவன் இறைவார்த்தையையே சவால் விடுகிறான். நாம் கற்பனை செய்வதுபோல் இயேசு மூன்று நாட்கள் சோதிக்கப்படவில்லை, நாற்பது நாட்கள்! (லூக் 4:2). உடனடியாக இயேசு, "அப்பாலே போ, சாத்தானே" என்று விரட்டியடிக்கவில்லை. நாற்பது நாட்கள் அவர் குழம்பித் தவித்து அலைக்கழிக்கப்பட்டார். "நான் இறைமகனா? அது கடவுளுடைய சத்தம்தானா?" என்று அவரது மனம் அலைமோதியது. அவரது மனநிலைத் தடுமாற்றம் தெளிந்து போராட்டத்தில் வெற்றிபெற்றபோது சாத்தானை துரத்தியடித்தார்.

அந்த நாற்பது நாட்களும் ஒருபுறம் பிதாவினிடமும் மறுபுறம் பிசாசினிடமும் பேசிக்கொண்டிருந்தார். இயேசுவிடம் பிசாசு பேசிக்கொண்டிருந்தான், ஆனால் பிதா அமைதியாயிருந்தார். ஏன்? அவர் ஏற்கனவே பேசிவிட்டார். ஏவாள் சோதிக்கப்பட்டபோது ஆண்டவர், "ஏவாளே, நான் சொன்னதை மறந்து விடாதே" என்று எச்சரிக்கவில்லை. ஆண்டவர் சொன்னதை வைத்து அவளே தீர்மானிக்கும்படி விடப்பட்டாள். சங்கீதம் 103:20இல், "கர்த்தருடைய வார்த்தையின் சத்தத்தைக் கேட்டு" என்பதை பல மொழியாக்கங்கள் "கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு" என்று மாற்றியிருக்கின்றன. நாம் கூர்ந்து கவனிப்போமானால் ஆண்டவருடைய வார்த்தை நம்மோடு பேசுவதைக் கேட்கலாம்.

ஏன் என்னோடு பேசவில்லை என்று சில நேரம் ஆண்டவரிடம் கேட்கிறோம். அவர் ஏற்கனவே பேசிவிட்டார்; நாம் அதன்படி செல்லவேண்டும். சில பிரசங்கிமார் ஆண்டவர் எனக்கு இதைச் சொன்னார், அதைச் சொன்னார் என்று சொல்லி, ஆண்டவர் சத்தத்தை கேட்க ஊக்குவித்து மக்களைக் குழப்பிவிடுகின்றனர். இது வஞ்சனைக்கு வாயிலைத் திறக்கும். சிலர், திருமறை மட்டும் போதாது. ஆண்டவரிடம் பேசுங்கள், அவர் உங்களிடம் பேசுவார் என்கின்ற

னர். புத்திசாலிகளும் குழம்பிப்போகும் காலத்தில் வாழ்கிறோம், கவனம்! வெளுத்ததெல்லாம் பசும் பாலென எண்ணும் பழக்கத்தில் மூழ்கிவிடக்கூடாது.

“அப்பா, எனக்கு உதவி செய்ய ஏன் வரமாட்டேன் என்கிறீர்கள்? பிசாசு தொல்லை கொடுக்கிறானே. நான் என்ன பதில் சொல்லவேண்டும்?” என்று இயேசு கேட்டிருப்பாரானால், பிதா பதிலளித்திருப் பார், “நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன்; அவ்வளவு தான்; அதன்படி செய்” என்றிருப்பார்.

இப்போது இயேசு எதிர்கொண்ட சோதனைகளை சுருக்கமாகப் பார்க்கலாம் —

### *சோதனை 1*

“நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்” (மத் 4:3).

தான் இறைமகன் என்று நிச்சயமாயிருப்பது இயேசுவுக்கு ஏன் அத்தியாவசியம்? அவரது மூன் றரை கால ஊழியத்தில், திரும்பத் திரும்ப, “நீர் தேவ னுடைய குமாரனா? அப்படியானால் எங்களுக்குச் சொல்லும்” என்ற சவாலை அவர் சந்திக்க வேண் டும். ஊழியத்தின் இறுதியில், சிலுவையில் அதே கிண்டலை சந்திக்க வேண்டும், “நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா.”

இயேசுவை பிதா கைவிட்டுவிட்டார். இன்னுமா அவர் தான் இறைமகன் என்று நம்புகிறார்? நிச்சய மாக ஆம்! யோபுவைப்போல இயேசுவும், “அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் நான் அவர் பிள் ளைதான். அவர் சொல்லியிருக்கிறார். அதை நான் நம்புகிறேன்” என்று உறுதியாக நின்றார். “அவரு டைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக் கொண்டேன்” என்றார் யோபு (யோபு 23:12). வேண் டிய ஆகாரமாவது என்ன? 40 நாட்கள் உபவாசத் திற்குப் பின்பு தேவைப்படும் உணவு. இந்தக் கல் லுகளை நான் அப்பமாக்க வேண்டியதில்லை. பிதா வாய்மொழிந்த வார்த்தைகள் எனக்குண்டு. “மனி தன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையி னாலும் பிழைப்பான்,” கூகிள் அல்லது யூடியூபி லிருந்து வருபவையல்ல! இறைவார்த்தையை அந்த அளவிற்கு கனம்பண்ணும் நிலையை எட்டிவிட்டீர் களானால், சாத்தானின் சதியைத் தோற்கடித்து விடு வீர்கள். உங்கள் மனது சாத்தானால் தாக்கப்படாது.

உடனே தேவதூதர்கள் வந்து, அவருக்குப் பணி விடை செய்தார்கள் (மன்னா பரிமாறி என்று நினைக்கிறேன்). சாத்தானின் தந்திரத்தில் மயங்கா மல் இறைவார்த்தையில் நிற்பீர்களானால் அது தான் உங்களுக்கும் நடக்கும்.

### *சோதனை 2*

“நீர் தேவனுடைய குமாரனேயானால்... தாழக் குதியும்... தூதர்கள்...” என்று சாத்தான் ஒரு சங்கீதத் திலிருந்து, சந்தர்ப்ப சூழ்நிலையைச் சாராமல் வச னத்தை எடுத்துரைக்கிறான் (மத் 4:5,6). இயேசு தேவனுடைய குமாரன் என்று எல்லா பிசாசுகளுக் கும் தெரியும். அவருக்கு முன் விழுந்து அப்படியே அறிக்கையிட்டன. ஆனால் அந்தப் பொய்யன் அப் படி இல்லை என்று அவரைத் தொல்லை செய்தான். நம்மையும் அவன் சவால் விடலாம்: “நீ இறைவ னின் பிள்ளை என்றால் ஏன் நோய்கள்? ஏன் தோல் விகள்? ஏன் தொல்லைகள்? ஏன் தூதர் பாதுகாவ லில்லை? ஏன் அற்புதங்கள் இல்லை?” “ஏன் ஆண் டவரே?” என்று கேட்டு அவரை சோதிக்கவேண்டாம். இரண்டாவது முறையும் இயேசு இறைவார்த் தையை எடுத்துரைத்தார்: “என்றும் எழுதியிருக் கிறதே” (மத் 4:7). கீழ்த்தரமான வித்தைகளால் தன் குமாரத்துவத்தை நிரூபிக்க அவர் விரும்பாமல் தேவனை சோதிக்கக் கூடாதென்று பிசாசை கடிந்து கொண்டார்.

### *சோதனை 3*

இருமுறை தோல்வியுற்று இப்போது புதிய யுக்தி யைக் கையாளுகிறான். இயேசு ஏன் சிலுவையில் அறையப்பட்டார் என்று அறிவீர்களா? தான் தேவ னுடைய குமாரன் என்று சொன்னதற்காகத்தான் (யோவா 19:7). இப்போது இயேசுவை சிலுவைக்குத் தப்பித்துக்கொள்ளும்படியாக திசை திருப்புகிறான். “உம்மை தேவனுடைய குமாரன் என்று அறிமுகப் படுத்தி சிலுவையில் அறையப்படுவானேன்? சக்கரவர்த்தியாக வாழ்க்கையை அனுபவியும். விலாசம் இல்லாதவராய், தெருப் பிரசங்கியாய், பட்டினி கிடப்பானேன்?” இயேசு அந்த ஆலோச னையை உதறித் தள்ளினார். உங்களையும் பின்

தொடர்ந்து அதே தந்திரத்தைக் கையாளுகிறான். "நீர் அடையாளம் இல்லாதவர், பயம், நோய், ஏழ்மை, வசதியின்மை, புகழின்மை, பெயரின்மை... வாரும், உமது தேவையை எல்லாம் பூர்த்தி செய்வேன்." அனேகர் பிசாசை ஆராதித்து இப்போது பண மழை யில் நனைந்து கொண்டிருக்கின்றனர். சில மலர் கள் பூங்காவில் மலருவதால் பாராட்டுப் பெறுகின் றன. மற்றவை இரவிலோ காட்டிலோ யார் கண்ணி லும் படாமல் மலர்கின்றன. ஆனாலும் படைத்த வரைப் பரவசப்படுத்த பக்குவமாய்ப் பூக்கின்றன. இருவரையும் படைத்தது இறைவனே. சில அப் போஸ்தலரின் பெயர்கள் இரண்டாம் முறை குறிப் பிடப்படவில்லை. எல்லாரும் பவுல்களாகவும், பேது ருக்களாகவும் இருக்கத் தேவையில்லை (ரோ 12:3). நீங்கள் இருக்கும் இடத்தில் முன்னேறுங்கள்.

பல சிலுவை மரணங்கள், சித்ரவதைகளை இயேசு பார்த்திருப்பார். ஆனாலும் தளரவில்லை. பேதுருவை சிறையிலிருந்து தேவதூதன் விடுவித்தான். இறுதி யில் மரணதண்டனைக்காக சிறையிலிருந்தபோது ஒரு தூதனை எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் தூதன் வரவில்லை.

நாற்பதாவது நாளில் இயேசு, "அப்பாலே போ, சாத்தானே" என்று அவனை விரட்டியடித்தார். அவர் பிதாவின் வார்த்தையில் உறுதியாய் நின்றதால் அவரது மனப்போராட்டம் ஓய்ந்தது. அதனா லென்ன? அவர் **ஆவியானவருடைய பலத்துடன்** வனாந்தரத்தை விட்டு வெளியேறினார் (லூக் 4:14). வசனத்தில் உறுதியாய் நின்று சாத்தானின் தந்திர வல்லமையை மேற்கொண்டால் ஆவியின் வல்ல மையுடன் சோதனையிலிருந்து வெளியேறுவீர்கள்.

"நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்" என்றான் பிசாசு. "நீ தேவனுடைய குமாரனானால் சிலுவை யிலிருந்து இறங்கி வா" என்று தூஷித்தனர் மக்கள் (மத் 27:40). இயேசுவிற்கு தெய்வீக வல்லமை இருந்தும் பிசாசோ மக்களோ சவாலிட்டபோது, தான் தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்க அதைப் பயன்படுத்தவில்லை.

மத்தேயு 16:16இல் பேதுரு, "நீர் ஜீவனுள்ள தேவ னுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று அறிக்கை யிடுகிறார். எத்தனைத் திருட்டுத்தனமாய் சாத்தான் அவருக்குள் நுழைகிறான் பாருங்கள்! உலகை எல் லாம் காட்டி இயேசுவிற்கு சாம்ராஜ்யங்களை வாக் களித்தவன் இப்போது பேதுரு மூலமாய் இயேசுவை பாடுகளுக்குத் தப்ப சோதிக்கிறான். இயேசு, "எனக் குப் பின்னாகப்போ சாத்தானே" என்றார். அதே வார்த்தைகள், அதே சோதனை, அதே திட்டு! மக்கள் அவரை தேவகுமாரன் என்று அடையாளம் கண்ட போது சாத்தான் பதறுவதை கவனியுங்கள்.

யோவான் 6:68-71இல் பேதுரு, "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம் மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்" என்றார். இயேசு இறைமகன் என்று பேதுரு அறிக்கையிட்டதும், இயேசு என்ன சொல் கிறார் பாருங்கள்: "பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக் குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்." அந்தச் சூழலில் பிசாசாகிய யூதாசை இயேசு குறிப்பிட என்ன அவசியம்? ஏனெனில் யூதாஸ் மனமார இயேசுவை இறைமகன் என்று நம்பவில்லை. சாத்தான் மறை வாக அங்கிருக்கிறான். தனது 40 நாள் உபவாசத் தையும் தனது குமாரத்துவத்தை சாத்தான் சவாலிட் டதையும் அதிரடியாய் நினைவுகூருகிறார். இப்போது அவரது சீடர்கள் அவரை இறைமகனென்று விசுவா சிப்பதால் சாத்தான் பதறுகிறான்.

தான் இறைமகன் என்று சந்தேகிக்க அவரது மனதில் நச்சு விதையைப் பதிக்க சாத்தான் தீவிர மாயிருந்ததேன்? வாருங்கள் ஆராயலாம்—

*1.* இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நம்புவதினால் மட்டுமே ஒருவர் அவர் பெயரில் நித்திய வாழ்வு பெற முடியும் (யோவா 20:31). இதை நாம் நம்ப வேண்டுமென்பதற்காகவே யோவான் தனத நற்செய்தி நூலை எழுதியதாகக் குறிப்பிடுகிறார். அதாவது இயேசு இறைமகன் என்று நம்பாவிட்டால் ஒருவருக்கு நித்திய வாழ்வு கிடையாது. இதனால் தான் சத்துரு இயேசுவின் மனதைக் குழப்ப முற் பட்டான். தான் இறைமகன் என்று இயேசுவுக்கு எள்ளளவும் சந்தேகமிருந்திருக்குமானால், நித்திய வாழ்வை ருசிக்க மக்கள் இரட்சிக்கப்படப்போவ தில்லை.

*2.* பிலிப்பு, "நீர் முழு இருதயத்தோடும் விசுவா சித்தால் தடையில்லை" என்றார். அப்பொழுது எத்தி யோப்பிய மந்திரி, "இயேசு கிறிஸ்துவை தேவனு

டைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்” என்றார் (அப் 8:37). அப்பொழுது அவர் திருமுழுக்கு பெற்று இறையரசின் குடிமகன் ஆனார். இந்த சத்தியத்தை நம்பி மக்கள் திருமுழுக்கு பெற்றால் சாத்தான் கடையை மூடவேண்டியதுதான். புரிகிறதா அவன் கவலை!

***3.*** சவுல் மனந்திரும்பியவுடன் ஜெப ஆலயங்களில் கிறிஸ்து இறைமகன் என்று பறைசாற்றுவதில் காலந்தாழ்த்தவில்லை. எண்ணற்ற யூதர்கள் இறையரசிற்குள் நுழைந்ததால் சாத்தான் ஆடிப் போனான் (அப் 9:20). இந்த உண்மையை திருச்சபைகளில் பிரசங்கிப்போமானால் மக்கள் இறைமகனில் விசுவாசம் வைப்பர். விசுவாசிகள் திரள்கூட்டமானால் சாத்தான் முக்காடிட்டுக்கொண்டு ஓட வேண்டியதுதான்! ஆகவே நடுங்கிப் போனான்.

***4.*** “இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?” (1 யோவா 5:5). உலகத்தை மேற்கொண்டு வெற்றி வாழ்க்கை வாழ்வது, இயேசு இறைமகன் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. உலகத்தின் அதிபதி சாத்தான். இந்த அடிப்படை சத்தியத்தை விசுவாசித்து நாம் உலகத்தை மேற்கொண்டால் உலகத்தைத் தன் இரும்புப் பிடிக்குள் சிக்க வைத்திருக்கும் சாத்தான்மேல் வெற்றி சிறக்கிறோம். விடுவானா சாத்தான்? ஆகவேதான் இயேசுதான் தேவகுமாரன் என்ற நிச்சயத்தோடு கெம்பீரமாய் வனாந்திரத்திலிருந்து வெளியேறியபோது சாத்தான் நிலைகுலைந்து போனான்.

***5.*** ‘‘இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்” (1 யோவா 4:15). கடவுளோடு நமது உறவை, ஐக்கியத்தை, ஒன்றிப்பை சாத்தானால் சகிக்க முடியாது. அப்படியானால் இயேசு தன்னைக் கடவுளின் மகன் என்று அறிவிப்பதை எப்படி விரும்புவான்?

***6.*** ‘‘பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்’’ (1 யோவா 3:8). ஆம், இயேசு இறைமகனாகக் களமிறங்கினால் சாத்தானின் கதி அதோகதிதான். அவரது குமாரத்துவத்தைக் குறித்து இயேசுவைக் குழப்பிவிட்டால் அவனுடைய வேலைகள் செழிக்கும். ஆகவேதான் ஒரு சோதனையோடு நிறுத்த அவனுக்கு மனமில்லை.

“நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்” என்று வனாந்தரத்திலிருந்து ஒலித்த இறைவார்த்தையில் இயேசு உறுதியாக நின்றார் (மாற் 1:11). உயிர்பிழைக்க அவர் கல்லுகளை அப்பங்களாக்கத் தேவைப்படவில்லை. கடவுளின் வாயின் வார்த்தையினால் பிழைத்தார். இல்லாவிட்டால் தேவாலயத்தின் உப்பரிகையிலிருந்து குதித்து உயிரிழந்திருப்பார். இறைவார்த்தையினாலே பிசாசின்மேல் வெற்றி சிறந்தார். அப்படியாக அவர் ஆவியின் வல்லமையில் வெளிவந்தார்.

இறைவார்த்தை வல்லமையுள்ளது (எபி 4:12). அதைக் கொண்டே சாத்தானை எதிர்கொள்ளுங்கள். கையில் விளக்கிருந்தும் கிணற்றில் விழுந்தவன் கதையாகிவிடக் கூடாது. சத்தியத்திற்கு எதிராக பொய்யனால் நிற்கமுடியாது. திருவசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் நமக்குப் போராட்டமுண்டு (எபே 6:12). மோசேயின் கோல் மந்திவாதிகளின் கோலை விழுங்கினதுபோல் நமது வல்லமை பிசாசின் வல்லமையை மேற்கொள்ள வேண்டும்.

“நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்’’ என்று இயேசு சரியாகத்தான் சொன்னார் (மத் 22:29). இறைவார்த்தையையும் இறைவனது வல்லமையையும் முடிச்சுப்போடுகிறார். நம்முடைய நம்பிக்கையை ஆதாரச் சட்டமாகிய மறைநூலில் வைப்போமானால் நாம் தவறிழைக்க மாட்டோம். மறைநூலே நமது உறுதுணையாகட்டும்! ■

(www.lilianstanley.com), 98435 11943.